**இலங்கை ஜூடோ சம்மேளனம் - 2019**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 மறுப்பு அபிப்பிராயம்**

இலங்கை ஜூடோ சம்மேளனத்தின் (''சம்மேளனம்'') 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று , மற்றும் வருமான செலவுக் கூற்று , மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இந்த கணக்காய்வினை மேற்கொள்வதற்கு பொதுத்துறையிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் உதவியை நான் பெற்றிருந்தேன்.

சம்மேளனத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயம் ஒன்றை வெளியிடவில்லை. எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை வழங்குவதற்குப் போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ள எனக்கு முடியாமல் இருந்தது.

**1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சம்மேளனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சம்மேளனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் சம்மேளனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சம்மேளனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சம்மேளனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

சம்மேளனத்தின் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்வதும் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதும் எனது பொறுப்பாகும். இருந்த போதிலும், மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை வழங்குவதற்குப் போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ள எனக்கு முடியாமல் இருந்தது.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சம்மேளனத்தினால் மீளாய்வாண்டிற்கான வங்கி இணக்கக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சம்மேளனத்தின் கருத்துரை சமர்ப்பிக்கப்படவில்லை. | வங்கி இணக்கக்கூற்றுக்கள மாதாந்த அடிப்படையில் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத ஆவணச் சான்றுகள்

| | விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | கையிலுள்ள காசு | 460,342 | உறுதிப்படுத்தல்கள் | சம்மேளனத்தின் கருத்துரை சமர்ப்பிக்கப்படவில்லை. | கையிலுள்ள காசின் இருப்புத் தன்மையை உறுதிப்படுத்துவதற்குப் போதியளவு ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | பெற வேண்டியவை | 234,220 | உறுதிப்படுத்தல்கள் மற்றும் அட்டவணைகள் | சம்மேளனத்தின் கருத்துரை சமர்ப்பிக்கப்படவில்லை. | பெற வேண்டியவைகளின்இருப்புத் தன்மையை உறுதிப்படுத்துவதற்குப் போதியளவு ஆவணங்கள் கணக்காய்விற் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (இ) | செலுத்த வேண்டியவை | 1,573,716 | உறுதிப்படுத்தல்கள் மற்றும் அட்டவணைகள் | சம்மேளனத்தின் கருத்துரை சமர்ப்பிக்கப்படவில்லை. | செலுத்த வேண்டியவைகளின் இருப்புத் தன்மையை உறுதிப்படுத்துவதற்குப் போதியளவு ஆவணங்கள் கணக்காய்விற் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | நடைமுறையல்லாச் சொத்தக்கள் | 12,156,531 | பௌதீக மெய்மையாய்வு அறிக்கைகள் மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேடு | சம்மேளனத்தின் கருத்துரை சமர்ப்பிக்கப்படவில்லை. | சொத்தக்களின் இருப்புத் தன்மையை உறுதிப்படுத்துவதற்குப் போதியளவு ஆவணங்கள் கணக்காய்விற் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சம்மேளனத்தின் மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 311,765 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 14,348 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 326,113 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. வருமானம் ரூபா 1,721,865 ஆல் குறைவடைந்தமை மற்றும் செலவு ரூபா 2,047,978 ஆல் குறைவடைந்தமையே இம்முன்னேற்றத்திற்கு காரணங்களாக இருந்தன.